


# நல்ல சமாரியன் பற்றிய உவமை

## காட்சியை அமைத்தல்

### இயேசுவின் காலத்தில் வாழ்ந்த "நியாயசாஸ்திரிகள்"யார்?

தற்காலத்தில் வாழும் நியாயசாஸ்திரிகள் (வக்கீல்) போல, இயேசுவின் காலத்தில் வாழ்ந்த நியாயசாஸ்திரிகள் இல்லை. இன்றைய வக்கீல்கள் பல தேர்வுகளை எழுதியும் மற்றும் நீதிமன்றத்தில் தங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு சார்பாக வாதாடியும் பணம் சம்பாதித்து வருகின்றனர். ஆனால் இயேசுவின் காலத்தில் நியாயசாஸ்திரிகள் என்பவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தையும் மற்றும் யூத மதத்தையும் பற்றி நன்கு படித்து, அறிந்து, தெரிந்து கொண்டவர்களாகவும் இருந்தார்கள். இவர்களை "இறையியலாளர்கள்"என்றும் அழைக்கலாம். வேதாகமத்தை படிக்கும் போது எங்கேயாவது "நியாய சாஸ்திரி" என்ற வார்த்தையை பார்த்தீரானால், அவை யூத மதத்தை நன்கு அறிந்த ஒருவரையே குறிக்கும் என்பதை நன்கு தெரிந்து கொள்ளுங்கள்.

### யார் இந்த சமாரியர்கள்?

சமாரியர்கள் என்பவர்கள் இஸ்ரேயல் தேசத்தில் வாழ்ந்த மக்கள் ஆவார்கள். பாபிலோனியர்கள் எருசலேமை கைப்பற்றிய பின்னர், புறஜாதியாய் இருந்த அவர்களின் முன்னோர்கள் இஸ்ரேயலுக்கு குடிப்பெயர்ந்தனர். இஸ்ரேயலில் தங்கியிருக்கும் போது அவர்கள் சில யூதர்களை திருமணம் செய்து கொண்டார்கள். இவர்கள் முழுமையான யூதர்கள் அல்லாததால், யூதர்களான ஆசாரியன் மற்றும் லேவியர்கள் இவர்களை வெறுத்தனர். சமாரியர்களோடு எந்த வர்த்தக தொடர்போ அல்லது நண்பர்களாகவோ யூதர்கள் இருந்ததில்லை.

## உவமை:



ஒருநாள் இயேசு பிரசாங்கம் செய்து கொண்டிருக்கையில் அவரை சோதிக்கும் பொருட்டாக ஒரு நியாயசாஸ்திரி எழுந்து ”நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்”என்று கேட்டார்.

இயேசு அவனை நோக்கி: ”நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதி இருக்கிறது” என்று கேட்டார்.

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழுப்பலத்தோடும் உன் முழு சிந்தனையோடும் அன்புக்கூர்ந்து உன்னிடத்தில் அன்பு கூறுவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக” என்று நியாய சாஸ்திரி கூறினான்.

இயேசு அதற்கு பிரதியுத்திரமாக: ”சரியாக சொன்னாய். அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்” என்றார்.

ஆனால் அந்த நியாயசாஸ்திரியோ தன்னை நீதிமானாக காண்பிக்கும் பொருட்டு ”என்னுடைய அயலான் யாார்?”என்று கேட்டான்.



அந்த நியாய சாஸ்திரிக்கு பதில் கொடுக்கும் விதமாக, எருசலேமிருந்து எரிக்கோவுக்கு சாலை வழியாக பிரயாணம் பண்ணின ஒரு மனிதனைப் பற்றிய உவமையை இயேசு சொன்னார். அந்த மனிதன் திருடர்களால்

தாக்கப்பட்டான். திருடர்கள் துரதிருஷ்டவசமாக அந்த மனிதனின் துணிமணிகள் முதற்கொண்டு தங்கள் கையில் கிடைத்த எல்லாவற்றையும் திருடிக்கொண்டு, அவனைக் காயப்படுத்தி சாலையருகில் பாதி உயிருடன் விட்டு சென்றார்கள்.



தற்செயலாக அந்த வழியாக ஒரு ஆசாரியன் வந்தான். காயப்பட்ட அந்த மனிதனுக்கு நிச்சயம் உதவி இருப்பான் என்று நினைக்கிறீர்கள் அல்லவா? ஆனால் அப்படி இல்லை. இரத்தம் வடிந்து கொண்டிருந்த அந்த மனிதனைப் பார்த்து சாலையின் ஓரமாக சென்றான். சற்று நேரத்தில் லேவியன் ஒருவன் அந்தப் பக்கம் வந்தான். லேவியன் என்பவன் தேவாலயத்தில் ஆசாரியனுக்கு உதவி செய்பவன். அவனும் உதவி செய்யாமல் அப்புறம் போய்விட்டான்.

கடைசியாக ஒரு சமாரியன் அந்த வழியாக வந்தான். காயப்பட்டிருந்த மனிதனைக் கண்டு மனதுருகி காயங்களுக்கு கனிவாக மருந்து போட்டு, அந்த மனிதனின் காயங்களை கட்டினான். சாலையோர சத்திரத்தில் கொண்டு போய் சேர்த்து, காயப்பட்ட அந்த மனிதனை கவனித்தான். காலையில் சத்திரக்காரனிடத்தில் பணத்தை கொடுத்து, அந்த மனிதனின் நன்கு சுகம் அடையும் வரை கவனிக்க சொன்னான். ஏதாவது அதிகமாக செலவழிந்தால், திரும்பி வரும் போது அதையும் கொடுப்பதாகவும் சத்திரகாரனிடத்தில் சொன்னான்.



கதை முடிந்தது ”அந்தக் காயப்பட்ட மனிதனுக்கு அயலான் யார்?”என்று இயேசு வினவினார்.



நியாயசாஸ்திரி (வக்கீல்) சொன்ன பதில் ”அவனுக்கு கருணைக் காட்டி, இரக்கம் செய்த அந்த சமாரியனே அவனுக்கு அயலான்”. ”நீயும் போய் அந்தப்படியே செய்” என்று இயேசு சொன்னார்.

**(இந்த நல்ல சமாரியனின் உவமையை, லூக்கா 10:25-37-ல் காணலாம்).**